**தலைப்பு 231 – கடன் இணக்கச்சபை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இந் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) முற்பணக் கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 686,270 ஆன தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் கணக்கிடப்படாமையால் நிதிச் செயலாற்றல் கூற்றில் மீதி மற்றும் கட்டுநிதி இணக்கக் கூற்றில் மீதி அப்பெறுமதியால் இணங்கியிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 686,270 ஆன தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் கணக்கிடப்படாமையானது தவறுதலாக ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவுகள் சரியாக நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### (ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 173,300 ஆன சொத்துக்கள், நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் வருடத்தின் சேர்த்தல்களின் கீழ் காட்டப்பட்டிருக்காமையால் நிதியல்லாச் சொத்துக்களின் மீதி அப்பெறுமதியால் குறத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சொத்துக்கள் 2102 அலுவலக உபகரணங்கள் கைப்பற்றல்களின் கீழ் கணக்கிடப்படாமையால் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கியிருக்கவில்லை. இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாது தடுக்கப்படும். | வருடத்தின் நிதியல்லாச் சொத்துக்கள் சேர்த்தல்கள் சரியாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 | பேணப்பட வில்லை. | எதிர்காலத்தில் பிணைப் பதிவேடு, பெறுகைக் குழு மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வரவுப் பதிவேடு என்பன நாளதுவரையாக்கப் பட்டு பேணப்பட்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படல் வேண்டும். |
| (ஆ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக் கப்படவில்லை. | | |
| (இ) | பெறுகைக் குழு மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வரவுப் பதிவேடு | பெறுகை வழிகாட்டிக் கோவை | பேணப்பட வில்லை. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02 மூலதன விடயங்கள் மற்றும் 10 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய ஒதுக்கங்களின் கூட்டுத் தொகையான ரூபா 38,850,000 இல் மொத்தம் ரூபா 26,023,884 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவு விடயத்திலும் தேறிய ஒதுக்கத்தில் 53 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சொன்றில் காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலக நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப் படாமையால் வெற்றிடங்களாக இருந்த பதவிகளுக்கு ஆட்சேர்க்க முடியாத காரணத்தினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சிக்கனம் மற்றும் செயற்திறன் ஆகியவற்றை கருத்திற் கொண்டு சரியாக செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 141,543 ஆன பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் திறைசேரிக்கு முறையாக அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடங்களில் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் திறைசேரியின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுடன் இணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை நிதிப்பிரமாணம் 135(1) | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் இரண்டு அல்லது மூன்று நபர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் வகையில் முடிந்தளவு சந்தர்ப்பங்களில் கடமைகள் பல நபர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் திணைக்களத்தின் கொடுப்பனவுகளை அதிகாரமளித்தல் மற்றும் அங்கீகரித்தல் ஒரு உத்தியோகத்தரினாலும் சான்றுப்படுத்தல் மற்றும் கொடுப்பனவுகள் ஒரு உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது | திணைக்களத்தின் தற்போது அங்கீகரிக்கப்பட்ட நிறைவேற்றுப் பதவிகளாக செயலாளர் மற்றும் கணக்காளர் பதவிகள் மட்டுமே காணப்படுவதால் அதிகாரமளித்தல் மற்றும் அங்கீகரித்தல் ஒரு உத்தியோகத்தரினாலும் சான்றுப்படுத்தல் மற்றும் கொடுப்பனவுகள் ஒரு உத்தியோகத்தருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 135(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நோக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்கள் மீது பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் கொடுக்கல் வாங்கலினால் பாதிப்புக்குள்ளானவர்கள் அக்கடன் பளுவிலிருந்து மீட்சி பெறுவதற்கு நிவாரண செயல் திட்டமொன்றினை தயாரிப்பதற்காக போதியளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இலங்கை முழுவதும் கடன் சுமையால் அவதியுறும் மக்களுக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை. | திணைக்களத்தின் சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் 2021 இல் கம்பஹா மற்றும் காலிக் கிளைச் சபைகளிலும், 2022 இல் குருநாகல் சபைக் கிளையிலும் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. அதே நேரத்தில் திணைக்களத்தின் செயற்பாடுகள் உள்ளடங்கிய சுவரொட்டி ஒன்றும் காலி மற்றும் கம்பஹா மாவட்ட பிரதச செயலகங்களில் விநியோகிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குறித்த விழிப்புணர்வு முறையாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. | இலங்கை முழுவதும் கடன் சுமையில் அவதியுறும் மக்களுக்கு திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டு வதற்கு விசேட கவனமொன்று செலுத்தப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த விளைவுமட்டத்தினை அடைந்துகொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்குள் கடன் தொடர்பான முறைப்பாடுகளுக்கு உரிய 1,525 வக்குகள் பதிவு செய்யப்படுவதற்கு மற்றும் அவற்றில் 540 முடிக்கப்பட்டு 985 முற்கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் செயலாற்றல் தரவுகளின் பிரகாரம் 1,364 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 223 மாத்திரம் முடிக்கப்படவிருந்ததால் | 2021 ஆம் ஆண்டில் கொவிட் வைரஸ் காரணத்தினால் நாட்டில் நிலவிய சூழ்நிலைகளால் கடன் இணக்கச் சபையின் விசாரணை நடவடிக்கைகள் தினமும் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்தவாறு கிளைச் சபைகளை உருவாக்குவதற்கு முடியதிருந்த காரணத்தினால் | செயலாற்றலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளபடியான 1,141 விண்ணப்பங்கள் அடுத்துவரும் வருடத்தில் தீர்க்கப்படுவதற்கு முன்கொண்டு வரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வருடத்தில் தீர்க்கப்பட்டிருந்த விண்ணப்பங்களில் உள்ளபடியாக தீர்க்கப்பட்டிருந்தமை 14.6 சதவீதம் மட்டுமே ஆகும். | எதிர்பார்க்கப்பட்டவாறு செயலாற்று மட்டத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | |

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவை பத்திரம் இலக்கம் 21/1596/304/134 "அரச செலவுகள் மீளாய்வு" எனும் தலைப்பில் நிதி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 2(i) பிரகாரம் குறிப்பிட்ட அங்கீகாரத்தின் கீழ் ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது ஆரம்பிக்கப்படாத கொள்வனவுகள் தற்காலிகமாக கைவிடப்படுவதற்கு குறிப்பிடப்பட்டிருந்தும் அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முரணாக மொத்தம் ரூபா 2,063,010 ஆன பெறுகைகள் வருட இறுதியின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. | திணைக்களத்தின் கிளைச் சபைகளுக்காக பதவியணி இணைக்கப்பட்டு அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்குமாறு நீதிமன்ற அமைச்சின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்காக போதியளவு அலுவலக உபகரணங்கள் இருக்க வேண்டுமென்பதால் ரூபா 2,063,010 ஆன பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசிய அலுவலக உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை இவ்வறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 இற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் மென் பிரதியொன்று பாராளுமன்றத்திற்கு | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கை விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4(2)(2) ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து முடிவடையும் வரையில் ஒவ்வொரு பெறுகை நடைமுறைகளையும் விபரிக்கும் வகையில் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பின்னர் அந்த அனைத்து பெறுகைகளையும் உள்ளடக்கி திருத்திய பெறுஜகத் திட்டமொ்று 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி | பெறுகைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ள கொள்வனவுகள் சில சந்தர்ப்பங்களில் திருத்தப்படுவதால் குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கேற்றவாறு திருத்தங்களுக்கு உட்படுவதால் அதற்கான 2021 ஆம் ஆண்டின் திருத்திய பெறுகைத் திட்டம் 2022.02.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு மற்றும் நீதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முடிந்தளவு சரியாக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் தொடர்பாக மற்றும் அரசின் விதிமுறைகள் பற்றிய புரிதல் ஒன்றுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.1.8 இன் பிரகாரம் மனிதரினால் உருவாக்கப்பட்ட அல்லது இயற்கை பேரழிவுகளால் அல்லது எதிர்பாராத சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மற்றும் இதற்குச் சமமான அரச அதிகாரிகளால் அவசர சந்தர்ப்பமொன்றாக தீர்மானிக்கப்பட்ட பிற இவ்வாறான சூழிநிலைகளில் பெறுகை நிறுவனத்தினால் சில அவசர கொள்வனவுகள் செய்யப்பட முடியுமான போதிலும் பல வருடங்களால் திட்டமிடப்பட்டிருந்த திணைக்களத்தின் புதிய கிளை அலுவலகங்களை நிறுவுவதற்குத் தேவையான ரூபா 5,655,060 ஆன பொருட்கள் அவசர சந்தர்ப்பமொன்றாக கருப்பட்டு அரச பலநோக்கு கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், இதற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு | கடன் இணக்க சபையின் கிளைச் சபைகளை நிறுவுதல் அத்தியாவசிய விடயமென்பதால் அவற்றுக்கான தளபாடங்கள் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போது நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யும் நோக்கத்தில் ரூபா 7 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தும், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் ரூபா 2 மில்லியன் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. நீதித் துறையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தல் மூன்றாண்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கங்களில் மேலதிக ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 5,655,060 ஆன நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்படாது குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2020 ஆம் வருடத்திலும் இக்கிளை அலுவலகங்கள் 03 இற்கு 05 மடிக்கணனிகள், 07 அச்சு இயந்திரங்கள், 04 பெக்ஸ் இயந்திரங்கள் என்பன ரூபா 1,174,028 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | ரூபா 5,655,060 ஆன 12 பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது திணைக்கள பெறுகை குழுவிற்கு அங்கீகரிக்கப்பட முடியுமான எல்லையை விஞ்சியிருந்தமையால் அதில் 10 விடயங்கள் ரூபா 4,953,384 ஆன விலைமனுவிற்கு மற்றும் மேலும் ஒரு விடயமொன்று ரூபா 99,560 விலை மனுவிற்கு திணைக்களப் பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | கிளைச் சபைகளில் அலுவலக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக தேவைப்படுகின்ற அலுவலக உபகரணங்கள் மட்டுமே திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு அங்கீகரிக்கப்பட முடியுமான எல்லையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 1,063,200 இற்கு கொள்வனவு செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 08 Laptop கணனிகளுக்கான இருப்பு இன்மையால் மீண்டும் விலைமனுக் கோரப்பட்ட போது ரூபா 1,622,400 இற்கு கொள்வனவு செய்வதற்கு வேண்டியேற்பட்டமையால் | கிளைச் சபைகள் நிறுவுதல் அவசரமான மற்றும் அத்தியாவசிய விடயமொன்று என்பதால் அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்திடமிருந்து 8 மடிக் கணனிகள் கொள்வனவு செய்வதற்காக கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் இருப்பு இன்மையால் குறிப்பிட்ட கட்டளை இரத்துச் செய்யப்பட்டு அடுத்துவரும் குறைந்த மனு | அரசிற்கு நட்டம் ஏற்படாதவாறு அரச நிதி முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 559,200 கிரயம் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |

### 3.6 அரச உத்தியோகத்தர் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தரின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அவ் உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு செயற்பாட்டினை துரிதமாய் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | நிதிப் பிரமாணத்தின் படி உத்தியோகத்தர் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க செயற்பட வேண்டும். |

### 3.7 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் 2022 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அமுல்படுத்துவதற்காக நிறுவனத்தின் பொறுப்புடன் தொடர்பு கொள்ளும் ஆர்வமுள்ள தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும் அத்தரப்பினர் மீது அறிவுறுத்தும் வேலை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தின் சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் 2021 இல் கம்பஹா, காலி மற்றும் குருநாகல் சபைக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றதுடன் திணைக்களத்தின் செயற்பாடுகள் உள்ளடங்கிய சுவரொட்டி ஒன்றும் காலி மற்றும் கம்பஹா மாவட்ட பிரதச செயலகங்களில் விநியோகிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குறித்த விழிப்புணர்வு முறையாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது | பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அமுல்படுத்துவதற்காக அக்கறை காட்டும் தரப்பினரை இனங்கண்டு அறிவுறுத்தும் செயற்திட்டங்களை செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை தேசிய மட்டத்தில் தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் நிறுவன, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் அடைந்து கொள்வதற்காக ஒருங்கிணைப்பதற்கான சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் பெயரிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் பெயரிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாட்சி

### 5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டில்லாததுடன் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நீதி அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட வேண்டும். |

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தித் திட்டம் 2022.04.19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2018 சனவரி 02 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.-- |
| (ஆ) | இயல்பான சேவை மட்டத்தினை பேணுவதற்கு மற்றும் ஊழியர் எண்ணிக்கையினை பற்றிய காலரீதியான மீளாய்வினை மேற்கொள்ளாததன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களிலான 20 வெற்றிடங்கள் நிலவின. | குறிப்பிட்ட வெற்றிடங்கள் முடிந்தளவு விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும |